RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s315

# உளவியல் நோக்கில் சங்கப்பாடல்களில் ஓவியக்கலை

**சு.ஏ. ரெமீக்கா [அ, *], மு. அஜி [அ]**

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம்-629157, தமிழ்நாடு, இந்தியா.

# Painting in Sangam Era from a Psychological Perspective

**R.V. Remika [a, *], K. Aji [a]**

[a] Department of Tamil, Annai Velankanni College, Tholayavattam-629157, Tamil Nadu, India

* Corresponding Author: remika271996@gmail.com

Received: 27-03-2021
Revised: 23-08-2021
Accepted: 05-09-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Evidence of the existence of painting in the Sangam period is found in the Sangam hymns. Sangam songs are proof that the art of painting was developed in our Tamil Nadu. Most of the paintings in our country are wall paintings. In ancient literature, the intuitions and thoughts of the mind were expressed through art. Romantic and physical realities, habits etc. can be found in sculptures and paintings. The moral values of the people living in five land forms are known through sculptures and paintings. These sculptures and paintings can be seen in temples even today. The relationship between the hero and heroine are artistically expressed. That is why the sculptures in the temples are referred by psychologists as examples of events in the lives of those who are attached to them. This article examines painting and sculpture in the Sangam poems from a psychological perspective.

**Keywords:** Painting, Sangam period, Wall Paintings, Hero, Heroine, Psychology

## முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்களில் மனங்களின் உள்ளுணர்வுகளும் எண்ணங்களும் கலைகளின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. காதல் மற்றும் உடல் சார்ந்த மெய்யுணர்வுகள் பழக்கவழக்கங்கள் முதலியவற்றை சிற்பக்கலையிலும் ஓவியக்கலையிலும் காணலாம். ஐந்திணை சார்ந்த ஒழுக்கங்களை சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் மூலம் உணர்த்திய செய்தியினை இன்றளவும் கோயில்களில் காணலாம் (Mailai Seeni Venkatasamy, 2018). தலைவன் தலைவியின் உறவுமுறை கலைநயத்துடன் உணர்த்தப்பட்டிருக்கும். அதனால் தான் கோவில்களில் உள்ள சிற்பங்களை மனோதத்துவ நிபுணர்கள் இல்வாழ்க்கையில் இணைந்திருப்பவர்களின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு உதாரணமாக கூறுகின்றனர். இக்கட்டுரை உளவியல் நோக்கில் சங்கப்பாடல்களில் ஓவியக்கலை மற்றும் சிற்பக்கலை பற்றி ஆராய்கிறது.

## பழமையான கலை

சங்க காலத்திலேயே ஓவியக்கலை இருந்ததற்கான சான்றுகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. ஓவியக்கலை நமது தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்குச் சான்று சங்கப்பாடல்களிலே உள்ளன. நமது நாட்டில் ஓவியங்களில் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே. தமிழகத்தில் அடுத்தப்படியாக உள்ள கலை என்பது சிற்பக்கலை ஆகும். தமிழ்நாட்டில் சிற்பக்கலைக்கு எண்ணற்ற சான்றுகள் கிடைத்துள்ளன. சிற்பக்கலை என்பது மிகவும் நுட்பமான கலை ஆகும். மெழுகு,

அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலிய பொருட்களினால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன.

"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"

எனக் குறிப்பிடுகிறது திவாகர நிகண்டு (Nadarasan, 2007).

## சுவர் ஓவியங்கள்

முந்தைய காலத்தில் அரசருடைய அரண்மனை, மாளிகை, கோயில் மண்டபம் முதலியவைகளில் சுவர்களில் ஓவியங்களை எழுதி அழகுபடுத்தியுள்ளனர். பண்டைய காலத்தில் அரசனுடைய அரண்மனையில் சித்திரமாடம் என்னும் கட்டடம் தனியே அமைக்கப்பட்டிருந்தது. பாண்டியன் நன்மாறன் என்னும் மன்னன் தனது சித்திர மாடத்திலே தங்கியிருந்தபோது அங்கேயே உயிர் நீத்தான். எனவே அவனை பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று புறநானூற்றில் குறிக்கப்படுகிறான். மாங்குடி மருதனார் பாண்டியனின் சித்திர மாடத்தை பின்வருமாறு கூறுகிறார்.

"கயம்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்புஇயன் றன்ன செஞ்சுவர் புனைந்து"

நக்கீரரும் தான் இயற்றிய நெடுநல்வாடையில் பாண்டியனின் சித்திர மாடத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார் (Nadarasan, 2007).

"வெள்ளி யன்ன விளங்கும் சுதைஉரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ
கருவொடு பெயரிய காண்புகின் நல்இல்" (Nadarasan, 2007)

## அரணம்னையின் அமைப்பு

சிற்ப வேலைபாடுகளுக்கு உதாரணமாக அரண்மனைகளை கூறலாம். அரண்மனை உருவான விதம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நெடுநல்வாடை பாடல் வரிகளின் மூலம் நாம் அறியலாம்.

"நூலறி புலவர் நுண்ணிதின் கயிறுஇட்டு
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து
ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின்"

சிற்ப நூல் வல்லார் நல்ல தெளிவாக ஆய்ந்த நூலை நேராகப் பிடித்து திசைகளை நன்கு அறிந்து அதற்குரிய தெய்வங்களை வணங்கி, வழிபட்டு முடியரசர்க்கு மனைவகுத்திடும் விதிகளின்படி வாயில்கள், மண்டபங்கள், இவற்றை அடிப்படையாகக் கொண்டு அரண்மனைகளை அமைக்கின்றனர் (Nadarasan, 2007).

அரண்மனை வாயில் கதவுகளைப் பற்றி குறிப்பிடுகையில் அதன் வேலைப்பாடுகளைப் பற்றியும் நெடுநல்வாடை மிகவும் அழகாக எடுத்துரைக்கிறது. பருத்த இரும்பால் செய்யப்பட்டு சாதிலிங்கம் சேர்த்து சிறந்த வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்ட அரண்மனைவாயிற் இரட்டை கதவுகளில் மேல் உத்திர கட்டைகள் அமைக்கப்பெற்று அதில் குவளை மலர் போன்ற வடிவங்கள் அமைக்கப்பெற்றிருந்தது என்பதை பின்வரும் பாடல்வரிகள் குறிப்பிடுகிறது.

"போதுஅவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்

தாழொடு குயின்ற போரமை புணர்ப்பின்" (Nadarasan, 2007)

## தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் நிலை

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் நிலை என்பது தன் இணையைப் பிரிந்து தவிக்கும் அன்றில் பறவை போல் உள்ளது. இயற்கையாகவே மனித மனங்கள் காதல் வயப்பட்டபின் தன் இணையைப் பிரிந்து வாழும் போது வாட்டமுற்று காணப்படும்.

இங்கு நெடுநல்வாடையில் தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி தன்னை அலங்காரம் செய்து கொள்ளாமல் ஆரம், நல்ல ஆடை, வளை, மோதிரம் ஆகியவை அணிந்து கொள்ளாமல் அழகில்லா வண்ணம் தீட்டப்பெறா ஓவியம் போல காட்சியளிக்கிறாள் என்பதை ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"புனையா ஓவியம் கடுப்ப, புனைவுஇல்"

பொதுவாகவே மனிதர்கள் மனதில் வருத்தமான நிகழ்வோ, உடல்ரீதியாக பாதிக்கப்பட்டாலோ அழகு அல்லது ஒப்பனை செய்து கொள்வது என்பது இருக்காது. இதையே நெடுநல்வாடை குறிப்பிடுகிறது (Ramasubramanian, 2018).

## மடலேறுதல்

இயல்பாகவே ஒரு சராசரி மனிதனுக்கு ஒரு பொருளின் மீதோ அல்லது ஒரு செயலின் மீதோ ஆர்வமோ விருப்பமோ ஏற்பட்டு விட்டால் அதை அடைந்தே தீர வேண்டும் என்ற ஒரு எண்ணம் ஏற்படும். இது உளவியல் அடிப்படையில் உண்மையே.

சங்ககாலத்தில் ஒரு தலைவன் தலைவியின் மீது விருப்பம் கொண்ட பின் அப்பெண்ணினை திருமணம் செய்ய முடியாத சூழலில், துணியில் அவளின் உருவத்தை வரைந்து ஊரார் முன்னிலையில் மடலேறுதல் என்பதை வழக்கமாக கொண்டிருந்தனர். இதன் பொருட்டு தலைவி எனக்கானவள், எனக்குரியவள் என்ற அறிவிப்பு போன்றது. இதனை நற்றினை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"வில்லாப் பூவின் கண்ணி சூடி

நல் ஏ முறுவல் எனப்பல்லூர் திரிதரு

நெடுமாப் பெண்ணை மடல்மானோயே!" (Ramasubramanian, 2018)

இதேபோல் கலித்தொகையில், தலைவன் விருப்பத்திற்கு தலைவி செவி சாய்க்கவில்லை. ஆகையால் தலைவன், தலைவியின் ஊரார் முன்னிலையில் மடலேறி அறிவிப்பேன் என தலைவன் கூறியதாக தோழி கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

"பொறுக்கலாம் வரைந்து அன்றிப் பெரிதாயி

பொலங்குழாய்!

மறுத்து அவ்வூர் மன்றத்து மடல்ஏறி

நிறுக்குவென் போல்வல் யான், நீ படு வழியே” (Puliyur Kesigan, 2018)

## முடிவுரை

சராசரியான ஒரு மனிதன் தன் மனதில் ஒரு பொருளின் மீது ஆசை ஏற்பட்டு விட்டாலோ அல்லது மனதளவில் வருத்தம் ஏற்பட்டு விட்டாலோ அலங்காரம் செய்து கொள்ளுதல் பண்போ, இது என்னுடை பொருள் என்பதை பிறர்க்கு அறிவிக்கும் செயல் என்பது இயல்பானதே , அதே போல் தான் சங்ககால மக்கள் ஓவியத்தின் மூலம் தங்களின் மனவுணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். சங்ககாலத்தில் அரசர்கள் சிறிது நேரம் மனதளவில் ஆனந்தமடைய தங்கள் அரண்மனையிலுள்ள சித்திரமாடங்களில் உள்ள ஓவியங்களையும், சிற்பங்களையும் கண்டு மனங்களித்திருந்தனர் என்பதை சங்கப்பாடல்கள் மூலம் அறியலாம். இதன்மூலம் கலைக்கும் மனவியலுக்கும் தொடர்பு உண்டு என்பதை அறியலாம்.

## References


Mailai Seeni Venkatasamy, (2018) Tamilar Valarththa Alaguk Kalaikal, Naam Thamizhar Pathippagam, Chennai, India.

Nadarasan, (2007) Pathupattu, Uma Pahippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2018) Kalithogai, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Ramasubramanian, V.T., (2018) Nattrinai, Mulai Nilaiyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License